[திரு. கே.சி. கருப்பணன்] [2017 ஜூலை 13

பண்ணையில் ஈக்கள் பரவாமல் தடுப்பதற்காக Larvadex என்ற ஒரு மருந்தைக் கோழிகளுக்குக் கொடுக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதைக் கோழிகள் உட்கொள்ளும்போது அந்த எச்சத்தில் ஈக்கள் உட்கார்ந்து முட்டையிடுகின்றன. அப்போது அந்த முட்டைகள் எல்லாம் அழிக்கப்பட்டுவிடுகின்றன என்று அவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இந்த மருந்தானது 4 முதல் 6 வாரங்களுக்கு கொடுக்கப்பட வேண்டும். 100 கிலோ கோழித் தீவனத்தில் 1 கிலோ மருந்தை சேர்த்துக்கொடுத்தால், கோழிப் பண்ணையில் ஈக்களின் தொல்லைகள் முற்றிலும் தவிர்க்கப்படும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) திருமயம் தொகுதி, பொன்னமராவதியில் உள்ள விசைத்தறிக் கூடத்தினை மீண்டும் இயக்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி அவர்கள்.

***திரு. எஸ். ரகுபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “திருமயம் தொகுதி, பொன்னமராவதியில் உள்ள விசைத்தறிக் கூடத்தினை மீண்டும் இயக்க வேண்டியதன் அவசியம்” குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்த விரிவான விவர அறிக்கை ஒன்று பேரவையின்முன் வைக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2017 ஜூலை 13] [திரு. ஓ.எஸ். மணியன்]

அறிக்கை

பொன்னமராவதி விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம்

திருச்சிராப்பள்ளி சரகத்திற்குட்பட்ட ட்டி.ஆர். (எச்) 150, பொன்னமராவதி விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் 29–11–1984–ல் பதிவு செய்யப்பட்டது. இச்சங்கம் 51 ஆதி திராவிடர்களுக்கும், 49 வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள பின்தங்கிய வகுப்பினருக்கும் வேலைவாய்ப்பு வழங்கும்பொருட்டு, 96 விசைத்தறிகளுடன் துவங்கப்பட்டது. இச்சங்கத்திற்கு 0.96 ஏக்கர் நிலம் திருமயம் தாலுகா, பொன்னமராவதியில் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவரின் 22–4–1985ஆம் தேதிய கடிதத்தின்படி ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலத்தில் கட்டடம் கட்டி, 17–8–1988 முதல் சங்கம் செயல்பட்டு வந்தது. வருவாய்த் துறையின் அரசாணை எண் 1154, நாள் 20–7–1989–ன்படி, 12 ஆண்டுகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு குத்தகையாக ரூ.13,953.85 நிர்ணயம் செய்யப்பட்டது.

இச்சங்கம் பின்வருமாறு நிதியுதவி பெற்று செயல்பட்டு வந்தது:

1.	தாட்கோ மானியம்	ரூ.10.00 இலட்சம்
2.	விளிம்புத் தொகை (Margin money)	ரூ. 5.00 இலட்சம்
3.	I.R.D.P. மானியம்	ரூ.10.00 இலட்சம்
4.	அரசு விதை மூலதனக் கடன்	ரூ.2.00 இலட்சம்
		ரூ.27.00 இலட்சம்

மேற்படி பெறப்பட்ட தொகை ரூ.27.00 இலட்சத்திலிருந்து கீழ்க்கண்டவாறு செலவிடப்பட்டுள்ளது:

நில மதிப்பு	ரூ.0.80 இலட்சம்
கட்டடம்	ரூ.7.00 இலட்சம்
இயந்திரங்கள்	ரூ.10.00 இலட்சம்
தளவாடங்கள் மற்றும் இதரம்	ரூ.2.20 இலட்சம்
தாட்கோ நடைமுறை மூலதனக் கடன்	ரூ.5.00 இலட்சம்
அரசு விதை மூலதனக் கடன்	ரூ.2.00 இலட்சம்
	ரூ.27.00 இலட்சம்

[திரு. ஓ.எஸ். மணியன்] [2017 ஜூலை 13

இச்சங்கம் தொடர் மின்வெட்டு காரணமாகவும், குவிப்பு நட்டம் ரூ.10.27 இலட்சம் இருந்ததாலும், சங்கத்தின் பொறுப்புகள் ரூ.39.62 இலட்சம் இருந்ததாலும், புதுக்கோட்டை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி காசுக் கடனாக ரூ.1.90 இலட்சம் மட்டுமே அனுமதிக்கப்பட்டதாலும், சங்கம் கடனுக்கு மூலப்பொருட்கள் வாங்கி தொழில் கொடுத்தபோதிலும் உறுப்பினர்கள் தொழிலில் ஆர்வம் காட்டாததாலும், சங்கத்தில் ஜவுளிகளை உற்பத்தி செய்ய இயலாத நிலை இருந்ததாலும், சங்கத்தைப் புத்துயிரூட்டி செயல்படுத்த திருச்சி சரக உதவி இயக்குநரால் மேற்கொள்ளப்பட்ட அனைத்து நடவடிக்கைகளும் பயனற்றுப் போனதால், சங்கம் கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.33179/91/கே–2, நாள் 1–6–1992–ன்படி கலைக்கப்பட்டது.

இச்சங்கத்தில் உள்ள விசைத்தறிகள் பொது ஏலம்மூலம் விற்பனை செய்யப்பட்டு கிடைக்கப்பெற்ற தொகை ரூ.6,00,000/–ல், கலைத்தல் கட்டணம் ரூ.90,000/– அரசுக் கணக்கில் செலுத்தியது போக, எஞ்சிய தொகை ரூ.5,10,000/– சங்கம் செலுத்த வேண்டிய குத்தகைத் தொகை நிலுவைக்குச் செலுத்தப்பட்டது. எஞ்சிய குத்தகைத் தொகை ரூ.4,79,777/– தள்ளுபடி செய்யக்கோரி பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டதன் அடிப்படையில், அரசால் தள்ளுபடி செய்து ஆணை வழங்கப்பட்டது.

பொன்னமராவதி விசைத்தறிக் கூடம் கலைக்கப்பட்டு 25 வருடங்கள் ஆகிவிட்டதால், பராமரிப்பில்லாமல் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால், புதிதாக நவீன இயந்திரங்களை நிறுவி, விசைத்தறிக் கூடத்தை மீண்டும் திறந்து செயல்படுத்துவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி அவர்கள்.

திரு. எஸ். ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அபூர்வ ராகமாகவோ, அதிசய ராகமாகவோ இருக்கும் என்று எதிர்பார்த்த எனக்கு, வழக்கமான பல்லவியாகத்தான் விவர அறிக்கை இருக்கின்றது. இது முடியாது என்கின்ற காரணத்தைத் தந்திருக்கின்றார்கள். 25 ஆண்டுகளுக்கு முந்தைய கதை என்று சொல்கின்றார்கள். அந்த முந்தைய கதையை சற்று பின்னோக்கிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கான

2017 ஜூலை 13] [திரு. எஸ். ரகுபதி]

மூலதனமாக 27 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கின்றது. ஆண்டுக் குத்தகை 13 ஆயிரம் ரூபாய் என்று சொல்லியிருக்கின்றார்கள். ஆனால், அவர்கள் கொடுத்திருக்கின்ற அந்தச் செலவுத் தொகையில் நிலத்தினுடைய மதிப்பு 80 ஆயிரம் ரூபாய் என்று தந்திருக்கின்றார்கள். ஒரு நிலத்திற்கு குத்தகையாக ஆண்டுக்கு 13 ஆயிரம் ரூபாய் என்று நிர்ணயித்துவிட்டு, நிலத்தினுடைய மொத்த மதிப்பான 80 ஆயிரம் ரூபாயை அன்றைக்குத் தந்திருக்கின்றார்கள். அந்த நிலத்தையே அப்போது விலைக்கு வாங்கியிருக்கின்றார்கள் என்றுதான் அர்த்தமாக எடுத்துக்கொள்ள வேண்டுமேதவிர, குத்தகை என்று எடுத்துக்கொள்ள முடியாது. அப்படி ஆண்டுக்கு 13,923/– ரூபாய் என்ற அடிப்படையில் 12 ஆண்டுகளுக்கு கணக்குப் பார்த்தால், 1 இலட்சத்து 67 ஆயிரம் ரூபாய்தான் மொத்த குத்தகையே வருகின்றது. ஆனால், அதற்காக அவர்கள் செலுத்தி இருக்கின்ற தொகை 5 இலட்சத்து 10 ஆயிரம்; தள்ளுபடி 4 இலட்சத்து 79 ஆயிரம் என்று போட்டு, மொத்தம் 9 இலட்சத்து 89 ஆயிரம் ரூபாய் குத்தகைப் பணமாகவே கணக்கு காண்பித்திருக்கின்றார்கள்.

முற்பகல் 11–40

அதுமட்டுமல்லாமல், தாட்கோவிலே மானியமாக 10 இலட்சம் ரூபாயைக் காண்பித்துவிட்டு, தாட்கோ கடனாக ரூ.5 இலட்சத்தைக் காண்பித்திருக்கிறார்கள். இப்படி எல்லாவற்றையும் கூட்டிக் கழித்துப் பார்த்தால், அவர்கள் சொல்லியிருப்பது ரூ.10,27,000/– நஷ்டம். ஆனால், அதிலே தாட்கோ நடைமுறை மூலதனக் கடன் ரூ.5 இலட்சம்; அரசு விதை மூலதனக் கடன் ரூ.2 இலட்சம்; ஆக 7 இலட்சம் ரூபாயையும் கழித்தால், மீதியிருப்பது ரூ.3 இலட்சம். கூட்டுறவு வங்கிகளிலே கொடுத்தது ரூ.1.90 இலட்சம்தான்; கழித்தால், அன்றைக்கு 1,37,000 ரூபாய்தான் கடன் இருந்திருக்கிறது. எனவே, அதிகாரிகளுடைய அலட்சியத்தாலும், திருச்சியிலிருந்து வந்து பார்க்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்ட காரணத்தாலும், அன்றைக்கு அந்த விசைத்தறிக் கூடத்தை மூடியிருக்கிறார்களே தவிர, வேறு எந்தக் காரணமும் அல்ல.

பொன்னமராவதி என்பது மிகவும் பின்தங்கிய பகுதி. அங்கே எந்தவிதமான தொழிற்சாலைகளும் கிடையாது. இன்றைக்கு அந்தக் கட்டடம் பழுதடைந்திருக்கிறது என்று சொல்கிறார்கள்; அது தவறு. இன்றைய சூழ்நிலையில், அந்தக் கட்டடத்தைப் பழுதுபார்த்துவிட முடியும். சுமார் ரூ.20 இலட்சம் அல்லது ரூ.25 இலட்சம் ரூபாயை செலவு செய்தால், அந்தக் கட்டடத்தைப்

[திரு. எஸ். ரகுபதி] [2017 ஜுலை 13

பழுதுபார்த்துவிட முடியும். அதற்கு அனுமதி தந்தால், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தே அந்தக் கட்டடத்தைப் பழுதுபார்த்து, இன்றைக்கு விசைத்தறிக் கூடத்தை இயக்குவதற்குண்டான சூழ்நிலையை உருவாக்கித் தர தயாராக இருக்கிறோம் அல்லது அதற்கு அனுமதியில்லை என்று சொன்னால், பொது மக்களிடையே தன்னார்வத் தொண்டர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். அவர்களோடு சேர்ந்து நானும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். ரகுபதி, சுருக்கமாகக் கேள்வி கேட்க வேண்டும். ஏனென்றால், நீங்கள் அமைச்சராக இருந்தவர். நீங்களே இப்படிக் கேள்வி கேட்டால் எப்படி?

திரு. எஸ். ரகுபதி: முதலில் இதை மட்டும் சொல்லிவிடுகிறேன். இரண்டாவது கேள்வியும் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிறகு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எல்லாவற்றிற்கும் விவர அறிக்கை வைக்க வேண்டும்.

திரு. எஸ். ரகுபதி: எனவே, மீண்டும் விசைத்தறிக் கூடத்தை இயக்குவதற்கு, பொது மக்களின் பங்களிப்போடு அந்தக் கட்டடத்தைக் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த அவையினுடைய மூத்த உறுப்பினர். இந்த அவையிலே முன்னாள் அமைச்சராகப் பணியாற்றியிருக்கிறார். அவர் இங்கே பேசுகிறபொழுது, வழக்கமான பல்லவிதான் இங்கே தரப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார். பல்லவியைப் பாடித்தான் ஆக வேண்டும். ஆனால், பல்லவியையே தொடர்ந்து, தொடர்ந்து பாடுகிற அரசு, அம்மா அவர்களுடைய அரசு அல்ல என்பதை மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பொன்னமராவதி விசைத்தறி நெசவாளர்

2017 ஜூலை 13] [திரு. ஓ.எஸ். மணியன்]

கூட்டுறவுச் சங்கம் 29–11–1984 அன்று தொடங்கப்பட்டிருக்கிறது. இந்தச் சங்கம் தொடங்கப்பட்ட 8 ஆண்டுகளிலேயே, 1–6–1992–ல் கலைக்கப்பட்டிருக்கிறது. என்னுடைய நினைவு சரியாக இருக்குமென்று சொன்னால், 1992–ல் இந்தச் சங்கம் கலைக்கப்பட்டபொழுதே, இந்த வினாவை எழுப்பியிருக்கிற மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த அவையில் அமைச்சராக இருந்திருக்கிறார்; அவர் இதை கவனிக்காமல் இருந்திருக்கிறார்; இதில் அக்கறை எடுத்துக்கொள்ளாமல் இருந்திருக்கிறார்; இதைத் தொடர்வதற்கான முயற்சியையும் மேற்கொள்ளாமல் இருந்திருக்கிறார் என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 96 விசைத்தறிக் கூடங்களுடன் இந்தச் சங்கம் தொடங்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே பல்வேறு கணக்குகளைச் சொன்னார். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்க விதிகளின்படி, 25 உறுப்பினர்களுடன் இந்தச் சங்கத்தைத் தொடங்குவதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆயத்தப்படுத்துவார், தயார்படுத்துவார் என்று சொன்னால், இந்தச் சங்கத்தை மீண்டும் தொடங்குவதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி அவர்கள்.

திரு. எஸ். ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கோருகிற உறுப்பினர்களைச் சேர்த்துத் தருவதற்கு நான் தயாராக இருக்கிறேன். மேலும், என்ன உதவிகள் வேண்டுமென்று சொன்னாலும், பொது மக்களிடமிருந்து பெற்றுத் தருவதற்கும் தயாராக இருக்கிறேன். ஏனென்றால், இதன்மூலம் 150 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். இங்கு வேறு எந்தத் தொழிற்சாலைகளும் கிடையாது. எனவே, நீங்கள் கேட்கின்ற உறுப்பினர்களை சேர்த்துத் தருவதற்கு நான் தயாராக இருக்கிறேன். பொன்னமராவதி விசைத்தறி கூடத்தை மீண்டும் இயக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.